முச்சந்தி முரளி



"இப்பிடியே எல்லாம் அவையின்ர ஆக்களை போட்டு நினைச்சதை முடிக்கப்போயினம் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 128

செவ்வாய்க்கிழமை
02 ஏப்ரல் 2024

பங்குனி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

வடக்கு பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி

# கடும் நடவடிக்கையை எடுக்குமாறு சிங்கள அமைப்புகள் அழுத்தம்

## ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர், ரி.ஐ.டி. உள்ளிட்ட பல தரப்புகளிடமும் முறைப்பாடு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 2**

**வடக்கு மாகாணத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளிலும் இல்ல அலங்காரத்தின்போதும், விநோத உடைப்போட்டியின் போதும் இலங்கையின் அரசமைப்பை மீறும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவித்து அதற்கு எதிராக உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் சிங்கள - பௌத்த அமைப்புகள் சில இணைந்து முறைப்பாடு மேற்கொண்டுள்ளன.**

11

இந்திய மீனவருக்கு

## மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2
அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களினதும் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.
கடந்த மாதம் 17ஆம் திகதி காரைநகர் கடற்பரப்பில் 21 இந்திய மீனவர்கள் இரண்டு

02

கைகலப்பால் காயம்

## 5 மணி நேரத்தில் 22 பேர் மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ்ப்பாணம் புறநகர்ப்பகுதியில் அடிதடியில் ஈடுபட்ட 22 பேர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர்

02

சடலத்தின் பெருவிரலில்

## மை அடையாளம்

சொத்து மோசடிக்கான முயற்சியா?
மானிப்பாய் பொலிஸார் விசாரணை

வித்தியா படுகொலை வழக்கு

## சாவுத் தண்டனைக் கைதி நேற்று உயிரிழப்பு

## கடல் அலையில் சிக்கிய இளைஞன் பரிதாபச் சாவு

விரிவுகள் :- பக். 11 இல்

## அநுரவின் போஸ்டரால் கல்விப்புலத்தில் குழப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 2
தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுர குமார திஸாநாயக்கா யாழ்ப்பாணம் வருவதை முன்னிட்டு ஒட்டப்பட்டுள்ள போஸ்டரால் வடக்கு மாகாண

02

## புலோலியில் வாள்வெட்டு: மணிக்கட்டு துண்டிப்பு

பருத்தித்துறை, ஏப். 2
புலோலியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவரது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

02

சட்டத்தரணியின் கோரிக்கை:

## மேலதிக அறிக்கையை திருத்திய பிரதிவாதி

யாழ்ப்பாணம், ஏப். 2
காணி தொடர்பான வழக்கொன்றில் பொலிஸார் நீதிமன்றத்தைத் தவறாக வழிநடத்தி நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் கீழ்மைப்படுத்துகின்றனர் என்று தெரிவித்து சட்டத்தரணி வீ.கௌதமன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது,

11

## எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 2
லிட்ரோ மற்றும் லாப்ஸ் ஆகியன சமையல் எரிவாயுவின் விலையை நேற்று நள்ளிரவு முதல் குறைத்துள்ளன.
12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல்

02

## ஞானசாரதேரருக்கு மன்னிப்பளியுங்கள்

இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 2
சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசாரதேரருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமன்னிப்பு வழங்கவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் கோரிக்கை விடுத்துள்ளார்.
அத்துடன், இது வைராக்கியத்தை வளர்ப்பதற்

11

## 1990 அம்புலன்ஸ் நாடு முழுவதும் திடீர் முடக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 2
இலவச அம்புலன்ஸ் சேவையான 1990 நாடு முழுவதும் நேற்றுமாலை 5 மணியிலிருந்து முடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

12




சுகாதார சேவைகள்

## வடக்குப் பணிப்பாளராக மீண்டும் பெரும்பான்மையினத்தவர்

யாழ்ப்பாணம், ஏப். 2
வடக்கு மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளராக மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரான வி.பி.எஸ்.டி.பத்திரண, சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.
வடக்கு மாகாணச் சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவின்...

கல்விப்புலத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.
இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தால், அநுர குமாரவின் வருகை தொடர்பான போஸ்டர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளின் மதில்களில், வாசல்களில் ஒட்டப்பட்டுள்ளன.
பாடசாலை மதில்களில் இவ்வாறான போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளமை தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று ஆராயப்பட்டுள்ளது. அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஒ-5)

## இந்திய...

படகுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். இது தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதி பாலன் முன்னிலையில் மீண்டும் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இவர்களில் ஒரு படகுக்கான வழக்கு விசாரணையின்போது கடற்படையினரைத் தாக்கிச் சிறுகாயம் விளைவித்தமை, சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியமை, அரச கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுகள் பத்து மீனவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.
இந்நிலையில் நேற்றையதினம் நீதிமன்றத்தில் முன்னிலையான பொலிஸார் பொதுச்சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமைக்காக மூன்று இலட்சத்து 78 ஆயிரம் ரூபா கோரி மேலதிக அறிக்கையொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.
இதனை ஆராய்ந்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் பொதுச்சொத்துகளுக்குச் சேதம் விளைவித்த காரணத்தால் மீனவர்களைப் பிணையில் விடுவிக்க முடியாதென உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை 10 மீனவர்களின் விளக்கமறியலை நீடித்தும் உத்தரவிட்டார். (அ-ஒ-66)

## 5 மணி...

த.சத்தியமூர்த்தி உறுதிப்படுத்தினார்.
நேற்றுமுன்தினம் மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணி வரையிலான 5 மணி நேரத்தில் இவர்கள் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவமனைக்குள்ளும் இவர்கள் கைகலப்பில் ஈடுபட முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
குறிப்பிட்ட நேரத்துக்குள் திடீரென அதிகளவானோர் சிகிச்சைக்காக வந்தமையால் மருத்துவர்களும் சிறிது நேரம் நெருக்கடிகளை எதிர்கொண்டனர். (அ-ஒ-26)

## புலோலியில்...

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் வட்டுவனை, புலோலியைச் சேர்ந்த செல்வநாயகம் செந்தூரன் (வயது - 30) என்பவரே மணிக்கட்டு துண்டிக்கப்பட்டு, படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-ஒ-100)

## எரிவாயு...

எரிவாயுவின் விலை 135 ரூபாவால் குறைக்கப்பட்டு 4 ஆயிரத்து 115 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
12.5 கிலோ கிராம் எடையைக்கொண்ட லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 625 ரூபாவால் குறைக்கப்பட்டு 4 ஆயிரத்து 115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (ஒ-இ)

# கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 2
வடக்கு மாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் ஒருபகுதியாக கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் செயற்பாடுகள் வலயக் கல்விப் பணிமனைகளூடாக நாளை முதல் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.
இந்தச் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு, பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளன. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் ஊடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத் திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.
இவர்களில் தேவைப்படும் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும் மாணவர்களின் குடும்பப் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு, மாணவர்களின் பாடசாலைக் கற்றல் நிறைவு பெறும்வரை தொடர்ச்சியாக இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஒ-26)

# வவுனியா சிறையில் கைதி உயிரிழப்பு

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 34 வயதுடைய கைதி ஒருவர் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த கைதிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டதையடுத்து சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். கைதிக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார்.
மாரடைப்புக் காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ஒ-18)

## மரண அறிவித்தல்



### கதிரவேலு வன்னியசிங்கம்


வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு வன்னியசிங்கம் அவர்கள் நேற்று (01.04.2024) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வமணியின் அன்புக் கணவரும், யாழினி, கீர்த்தினி அவர்களின் தந்தையாரும், நவினாகரன், ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜீவிதன், அபினாஷ், தனுசியா, ரிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வரத்தினம், தங்கேஸ்வரி மற்றும் கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் சரசாலை வடக்கில் உள்ள (நவினாகரன் யாழினி) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பிவிளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 869 7081

(CR 42136) S-1

## மரண அறிவித்தல்



### சரவணபவன் மயூரன்

(உத்தரவு பெற்ற நில அளவையாளர்,
உப தவிசாளர் - வலிகாமம் மேற்கு மத்தியஸ்த சபை)

வட்டு தெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணபவன் மயூரன் அவர்கள் (உத்தரவு பெற்ற நில அளவையாளர், உப தவிசாளர் - வலிகாமம் மேற்கு மத்தியஸ்த சபை) நேற்று (01.04.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் சரவணபவன் - மங்களேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், கார்த்திகாவின் (பதவிநிலை உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம்) கணவரும், அனேகன், ஆராதனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாவின் அன்பு அண்ணனும், செந்தூரன், ஆரூரன், அகல்யா, நித்தியா, ஜெயகணேஷ் ஆகியோரின் மைத்துனரும், றோசன், அபிசன், லக்ஷன், ஆர்ணா ஆகியோரின் மாமனாரும், வர்மனின் பெரியப்பாவும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (03.04.2024) காலை 9.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் வெப்பம் அதிகம்!

கொழும்பு, ஏப். 2

**வடமாகாணத்தில் குறிப்பாக மன்னார், வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்று வெப்பம் அதிகம் நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

சப்ரகமுவ, மேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களில் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் 50 மில்லிமீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் மற்றும் வவுனியா மாவட்டங்களின் சில இடங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்றுள்ளது. (ம)

## 'அரசறிவியலாளன்-6' வெளியீடு நாளை!

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'அரசறிவியலாளன் இதழ் 6' வெளியீட்டு விழா, யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நாளை புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அரசறிவியல் ஒன்றியத்தின் தலைவர் சு.டிலக்சன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், கௌரவ விருந்தினர்களாக அரசறிவியற்றுறை பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம், அரசறிவியற்றுறை விரிவுரையாளர் ந.தர்மினி, அரசறிவியற்றுறை விரிவுரையாளர் திருமதி கு.யஸ்மியா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

## மாரடைப்பால் முதியவர் சாவு

யாழ்ப்பாணம், ஏப். 2

ஆலயத்தில் தேங்காய் உடைத்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த முதியவர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து நேற்றுத் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார். சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி அர்ஜுனன் (வயது -68) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள ஆலயமொன்றுக்குச் சென்று வழிபட்ட பின்னர் தேங்காய் உடைத்துவிட்டு வீடு திரும்பிய குறித்த முதியவர் இயலாத நிலை யில் வரம்பொன்றில் அமர்ந்தபோதே மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனைகளில் அவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ஒ-66)

## மருத்துவமனைகளில் தாதியர்கள் போராட்டம்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவமனைகளினுள் தாதியர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கிலுள்ள மருத்துவமனைகளில் நேற்று பி.ப. ஒரு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தாதியர்களின் எதிர்நோக்கும் சம்பளம் மற்றும் சீருடைக் கொடுப்பனவு வழங்குதல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-ஒ-56-100)

## தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு மக்கள் தண்டனை வழங்குவர்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்காமல் பாதுகாக்கும் ஆட்சியாளர்களுக்கு அடுத்த தேர்தலில் மக்கள் நிச்சயம் தண்டனை வழங்குவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் நடைபெற்று வருடங்கள் பல கடந்திருந்தாலும் இப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வுகாணப்படவில்லை. இந்நிலையில் இத்தாக்குதல் சம்பவம் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்ச்சைக்குரிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார். அவரின் இந்த அறிவிப்பு தொடர்பில் பலர் விமர்சனங்களை முன்வைத்திருந்தாலும் இதன் பின்புலத்தில் வேறு நோக்கம் இருக்கலாம் என நான் கூறி இருந்தேன். இதற்கு இந்தியா உதவியுள்ளது என அவர் கூறியுள்ளார். இது பாரதூரமான விடயமாகும். இந்தியாதான் இதற்கு உதவியது என அவர் கூறுவாராயின், இந்தியாவுக்கு இதனைச் செய்வதற்கு உதவியது யார்? அதாவது பிரதான சூத்திரதாரி யார் என்பதே எமது கேள்வியாகும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸாரின் உதவியுடன் விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்படும் என தற்போதைய ஜனாதிபதி கூறினார். அது ஏன் தாமதப்படுத்தப்படுகின்றது? இந்தச் சூத்திரதாரிகள் தமக்கு ஆதரவு வழங்கும் ஒரு பிரிவுதான் என்பது அவருக்குத் தெரியும். அதனால்தான் பாதுகாக்கப்படுகின்றனர். நீதியால் தண்டனை கிடைக்காவிட்டாலும், அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு மக்கள் காத்திருக்கின்றனர். அடுத்த தேர்தலில் மக்கள் அதனைச் செய்வார்கள். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் குறுகிய காலப் பகுதிக்குள் பிரதான சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் - என்றார். (அ-ஒ-44)

## தினம் தெரியுமோ?

"காட்டிக் கொடுப்பவன் எங்கே? அந்த கயவனைக் கொண்டு வா இங்கே" எண்டு இயக்கப்பாட்டொண்டு முந்தி வலுபேமஸ். எப்பவும் எங்கட இனத்தில காட்டிக் குடுக்கிறதுக்கெண்டே ஒரு கூட்டம் அலையுது. பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டியளில எங்கட இனத்தின்ர போராட்ட அடையாளங்களையும், அரசாங்கத்தின்ர இப்பத்தை ஆக்கிரமிப்புகளையும் சொல்லுறமாதிரி, இல்லங்களை டெக்கிறேசன் செய்து கொண்டு வந்தவை. ஆனால் அதை ஆரோ திணைக்கள அதிகாரிமாருக்கு போட்டுக்குடுக்க, அவை அதுகளை நிப்பாட்டச் சொல்லி 'சூம்' மீட்டிங்கில ஓர்டரும் போடுப்பட்டது. அதோட இப்பிடி டெக்கிறேசன் செய்யிறது கொஞ்சம் குறைஞ்சிருந்தது.

இப்பிடியான நிலையில தான் யாழ்ப்பாணம் யூனியன் கொலிச்சில, கார்த்திகைப் பூ, டாங்கி எண்டு இல்லங்களை டெக்கிறேசன் பண்ணினவை. பள்ளிக்கூடத்தில இருக்கிறவைக்கே இப்பிடி டெக்கிறேசன் பண்ணியிருக்கிற தகவல் தெரிய முதல், ஆரோ உதைப்பற்றி பொலிஸுக்கு போட்டுக் குடுத்திட்டினம். அதுக்குப் பிறகு பள்ளிக்கூடப் பிள்ளையளையும், அதிபரையும், ரீச்சர்மாரையும் கூப்பிட்டு பொலிஸ்காரர் கடும் விசாரணையாம். வெளிநாட்டுக்காரர் காசு குடுத்துத்தான் இப்பிடி டெக்கிறேசன் பண்ணினவ எண்டதுதான் பொலிஸுக்குச் சந்தேகம். அப்பிடிக் காசைக் குடுத்து விளையாட்டுப் போட்டி இல்லங்களை டெக்கிறேசன் பண்ணவேணுமெண்டு வெளிநாட்டுக்காரருக்கு என்ன விஸ்லங்கம்? விளையாட்டுப் போட்டியளில இப்பிடி கார்த்திகைப் பூவை டெக்கிறேசன் செய்தால், தமிழீழம் தானா வந்திடுமாமோ? இல்லாட்டி டாங்கி மாதிரி அலங்காரம் செய்தால், அந்த டாங்கிக்கு உயிர்வந்து இஞ்சையுள்ள ஆமிக்காரரை குண்டடிச்சுக் கொண்டிடுமோ? இல்லைத்தானே. பிறகென்ன கூந்தலுக்கு பள்ளிக்கூடப் பிள்ளையளின்ர டெக்கிறேசனுகளை இப்பிடிப் போட்டுக்குடுக்கினமெண்டு அம்மாவாணை விளங்கவேயில்லை.

பள்ளிக்கூட நிர்வாகத்தோட தனிப்பட்ட கோபம் உள்ளவைதான் இப்பிடிப் போட்டுக்குடுத்திருக்கினம் எண்டு பரவலாக் கதை அடிபடுகுது. ஆனால் அப்பிடித் தனிப்பட்ட கோபதாபத்துக்காக இப்பிடிப் பள்ளிக்கூடப் பிள்ளையளின்ர வாழ்க்கையில விளையாடுறதை ஒருத்தரும் ஏற்றுக்கொள்ளாயினம். போட்டுக்குடுக்கிறவைக்குத்தான் மதி மத்திமம் எண்டு பாத்தால், அதை ஒரு முறைப்பாடா நினைச்சு, விசாரிக்கிறவை எவ்வளவு பெரிய கெட்டிக்காரர் எண்டு பாருங்கோ.

சிங்களப் பள்ளிக்கூடங்களில இதைவிடப் பென்னம் பெரிசாவெல்லாம் டாங்கி செய்யினம். இப்ப கிட்டடியில யாழ்ப்பாணத்தில விமானப்படைக்காரர், தங்கட பிளேன் எல்லாம் கொண்டந்து இஞ்சத்தைப் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்குக் காட்டினவை, சும்மா ஒரு கடுதாசி மட்டையிலயும் பேப்பரிலையும் செய்த டாங்கியாலையும், கார்த்திகைப்பூவாலையும் நாட்டின்ர அமைதி கெடுமெண்டால், சிங்களப் பள்ளிக்கூடப் பெடியள் செய்த டாங்கியாலையோ, இல்லாட்டி போரை நினவுபடுத்துற விமானங்களையோ இஞ்ச கொண்டந்தது கடும்பிழை எல்லோ. சிங்கள ஆக்கள் எது செய்தாலும் அதைப்பற்றி அலட்டிக்கொள்ளாத பொலிஸ், தமிழர்கள் எண்டவுன துள்ளிக்குதிச்சுக் கொண்டு விசாரணையில இறங்குறதுதான் எங்கட டிசைன் போல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு தாரைவார்ப்பு துரோகமே!

## ராமதாஸ் தெரிவிப்பு

கச்சதீவு தாரைவார்ப்பு மன்னிக்க முடியாத துரோகம். அதை நியாயப்படுத்தும் காங்கிரஸுடன் தி.மு.க. உறவு வைத்திருப்பதன் மர்மம் என்ன?' என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளதாவது:-

'தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்த கச்சதீவை இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசு, இலங்கைக்குத் தாரை வார்த்தது மன்னிக்க முடியாத துரோகம் ஆகும். இதை ஐம்பதாண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வாகக் கடந்து சென்று விட முடியாது. கச்சதீவு அன்று தாரை வார்க்கப்பட்டதன் விளைவுகளை இன்று வரை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டதை அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதி, தெரிந்தே அனுமதித்தார். கச்ச தீவை இலங்கைக்கு தாரை வார்க்கும் முடிவை இந்திரா தலைமையிலான மத்திய அரசு எடுத்தபோது கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியில்தான் கருணாநிதி இதைத் தடுக்க எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை - என்றுள்ளது. (ம)


### வாடகைக்கு உண்டு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் CTB தரிப்பிடத்திற்கு முன்னால் மூன்று கடைகளும். யாழ் ஸ்ரான்லி வீதியில் மூன்று கடைகளும் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 723 2535


### இரண்டாம் ஆண்டு நினைவு நாள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 02 |
| 06 | 04 |
| 1969 | 2022 |

**அமரர் நவரத்தினசிங்கம் வரகீசன்**
B.Sc.Eng.(Hons), ACMA, PgDBM

ஆண்டுகள் கடந்தாலும்
உன் நினைவுகள்
என்றும் எம்முடனே வாகி!

— நண்பர்கள் —

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 31 |
| 09 | 03 |
| 1938 | 2024 |

### லூசியா யோசப்பின் இராயப்பு

யாழ். நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட லூசியா யோசப்பின் இராயப்பு அவர்கள் நேற்று முன்தினம் (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஜெக்கப் சைமன் - றெஜினா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வஸ்த்தியாம்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராயப்பு அவர்களின் அன்பு மனைவியும், சுதா (இலங்கை), ஆனந் (கனடா), அமுதா (இலங்கை), சாந்தா (கனடா), புனிதா (லண்டன்), ஜெயந் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் கிருபராஜ், மதியரசி, சத்தியநாதன், ரவிச்சந்திரன், பொபி, ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் .மேரி மெக்டலின் (ராணி), காலஞ்சென்றவர்களான அலெக்சாண்டர் பசில், அஞ்சலா (ராஜேஸ்) மற்றும் பீற்றர்போல், மேசி லூட்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நிக்கொலஸ், சிவயோகன், யோர்ஜ், அல்பிரட், ராசம், ஹெறினா மற்றும் கமலா, இந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரவினா - சிவா, சன்றின், கெவின், அஸ்லின், கசில்டன் - கலாஞ்சலி, அஞ்சனா, டியானா, அன்றூ, பியோனா, ஜியோனன், கெய்டன், ஜெனிசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சர்வின், ஆத்விக் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2024) புதன்கிழமை பிற்பகல் 5.00 - 9.00, நாளை 03.04.2024 வியாழக்கிழமை முற்பகல் 8.00 - 9.00 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham என்னும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 03.04.2024 புதன்கிழமை 9.30 மணியளவில் St. Thomas the Apostle located 14 Highgate Drive, Markham என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Christ the King Cemetery Located at 7770 Steeles Avenue East, Markham, ON, Canada என்னும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

ஆனந் - மகன் : +1 416 877 0800, ஜெயந் - மகன் : +1 416 605 6469
கிருபராஜ் - மருமகன் : +1 94 76 670 4303, சத்தியன் - மருமகன்: +1 94 11 487 8012
புனிதா - மகள் : +1 44 794 766 6284, பீற்றர்போல் - சகோதரன் : +1 416 297 7817

(CS/54605) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**விக்கினேஸ்வரன் சேதுலட்சுமி**
மாசுவன், நீர்வேலி
(உரிமையாளர், மயூரா பார்மசி திருநெல்வேலி)
**திதி : பங்குனிமாத தேய்பிறை அட்டமி**
**(02.04.2024)**

அன்புடனும், பண்புடனும், கண்டிப்புடனும்
ஆக்கமும் ஊக்கமும் தந்து
அவனியிலே நாம் சீரும் சிறப்புமாக வாழ
எமக்கு வழிகாட்டி எமக்காக வாழ்ந்த அம்மா
மண்விட்டு நீங்கள் மறைந்து விண் சென்றாலும்
நீங்கள் எம்மனதில் என்றும் வாழ்கிறீர்கள்
நெஞ்சடைக்கும் உம் நினைவுகளால்
நித்தமும் நாம் கலங்குகிறோம் அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(CS/28385) J-1

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19.04.1937 | 13.04.2023 |

53/18, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பாகிஸ்தான் காட்டும் பாதை


பொருளாதாரமாக இருக்கட்டும், அரசியலாக இருக்கட்டும், அபிவிருத்தியாக இருக்கட்டும் எந்தவொரு விடயத்திலும் உலகத்தில் உள்ள அத்தனை நாடுகளும் ஏதோவொரு வகையில் இலங்கைக்கு ஏதோவொன்றைக் கற்றுக்கொடுப்பனவாகத்தான் அமைந்திருக்கின்றன. இந்தப் பட்டியலின் இறுதி வரவாக அமைந்திருக்கின்றது பாகிஸ்தான்.


இலங்கையைப்போலவேபொருளாதாரத்தில் பலமிழந்து நலிவுற்று திவாலடைந்திருக்கின்றது பாகிஸ்தான். பொருளாதாரத்தில் பலம்பெற்று இயல்பு நிலையை அடையவேண்டுமாயின், நாணய நிதியத்தின் கடன்களே கதி என்ற நிலைமை பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் கடனுத்தரவாதங்களை நடைமுறைப்படுத்தி மறுசீரமைப்புகளை மேற்கொண்டுள்ள சமநேரத்தில், இன்னொரு மறுசீரமைப்பையும்பாகிஸ்தான்நாடாளுமன்றத்தில் இருந்து ஆரம்பித்திருக்கின்றார் பாகிஸ்தான் பிரதமரான பொஸ் ஷெரீப்.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கை (பொஸ் ஷெரீப்பின் கட்சி) சேர்ந்த, பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் வரப்பிரசாதங்கள் மற்றும் சலுகைகளில் பெரும் விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உத்தரவுகளை பிரதமர் பொஸ் 'கண்டிப்பாகப்' பிறப்பித்ததையடுத்து தற்போது அந்த மாற்றம் 'கொள்கையளவில் பொதுவான திட்டமாக' ஏற்றுக்கொள்ளப்பட்டு பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாதங்கள், விசேட கொடுப்பனவுகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. பிரதமர் பொஸ் ஷெரீப்பும் இதற்கு விதிவிலக்கல்லர். எல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சர்களுக்கோ, ஜனாதிபதிக்கோ ஏன் பிரதமருக்கோகூட செங்கம்பள வரவேற்பு வழங்கக்கூடாது என்ற அறிவித்தலும் பாகிஸ்தானில் இறுக்கமாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன், பொதுப்போக்குவரத்துப் பயன்பாடு மற்றும் தானியத்தில் தன்னிறைவு காணுதல் என்பன தொடர்பிலும் பாகிஸ்தான் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறுகிய காலத்தில் பொருளாதாரத் தளம்பல் நிலையை இல்லாமற்செய்ய வேண்டுமாயின், பல பில்லியன் டொலரை விழுங்கும் போக்குவரத்துத் துறையை பொதுப்போக்குவரத்தை நோக்கி உந்தித் தள்ளவேண்டும். அத்துடன் குறுங்காலப் பயிர்களான தானியச் செய்கையையும் ஊக்குவிக்கவேண்டும் என்ற புரிதலை தெளிவை, பாகிஸ்தான் நன்றாகவே புரிந்துவைத்திருக்கின்றது. ஆக, நாணயநிதியத்தின் கடன்களை, ஏற்கனவே இருந்த கடன்சுமைக்கான சுமைதாங்கியாக அல்லாமல் அதையொரு மூலதனமாகப் பயன்படுத்தக்கூடிய அத்தனை ஏதுநிலைகளையும் பிரதமர் பொஸ் ஷெரீப்பின் கீழ் பாகிஸ்தான் ஏற்படுத்தியிருக்கின்றது.

அரகலய போராட்டத்தின் பின்னர், இலங்கையில் எதிர்பார்க்கப்பட்ட மாற்றமும் இத்தகையதேதான். ஆனால், இங்கு நடக்கும் காட்சிகளோ வேறு. பல லட்சம் ரூபா செலவில் நடத்தப்படும் நாடாளுமன்ற அமர்வுகளின் சாட்சியங்களாக இனவாதக் கருத்துகளே எஞ்சிநிற்கின்றன. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுக்காக வழங்கப்படும் செங்கம்பள வரவேற்புகளுக்கு இலங்கையில் எந்தக் குறையும் இல்லை. இலகுவில் தன்னிறைவு காணக்கூடிய பொருள்கள் மற்றும் உற்பத்திகள்கூட இறக்குமதி என்ற மூலோபாயத்தை மையமாகக் கொண்டே சுழன்றுகொண்டிருக்கின்றன. எனில், இந்த நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு பலப்படும்? எவ்வாறு மேம்படும்? 'பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை' என்ற மனோநிலையில் உள்ள எங்கள் ஆட்சியாளர்களுக்கு பாகிஸ்தானும் இன்னொரு பாடம்தான்.



# ஜூலை இறுதிக்குள் தேர்தல் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 2

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் அல்லது ஓகஸ்ட் மாதத் தொடக்கத்தில் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் என்று சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கும் இடையில் இடம்பெறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைய தேர்தல் சட்டமே தேர்தல் நடைமுறையை நிர்வகிக்கும். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு 2024ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்படும். ஜூலை மாதத்துக்குள் அந்தப் பணிகள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## குற்றங்களை தடுக்க பொலிஸ் குழு

கொழும்பு, ஏப். 2

நாடளாவிய ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல் கும்பலைச் சேர்ந்தவர்களைக் கைதுசெய்ய 20 விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

இதற்கென சுமார் 100 அதிகாரிகளைக் கொண்ட மோட்டார் சைக்கிள் குழுக்கள் களமிறங்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## விமல் விடுதலை

கடவுச்சீட்டு வழக்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விடுவித்துள்ளது. சட்டவிரோத கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. (ச-இ)

## விமல் கூட்டணியிலும் ஜனாதிபதி வேட்பாளர்

கொழும்பு, ஏப். 2

ஜனாதிபதித் தேர்தலில் மேலவை இலங்கைக் கூட்டணியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப் படவுள்ளார் என்று மேலவை இலங்கைக் கூட்டணி மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். தற்போதைய பிரதான வேட்பாளர்கள் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# மைத்திரியின் கருத்தால் இராஜதந்திரப் பிரச்சினை

*ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 2

இரண்டு நாடுகளுக்கிடையே இராஜதந்திர பிரச்சினையை மூளச் செய்யவே உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் அண்டை நாடொன்றைத் தொடர்புபடுத்தி சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார். இந்தப் பிரச்சினையில் இன்னொரு நாட்டை இழுப்பதில் மேலும் பல சிக்கல்கள் எழும். இது குறித்து மைத்திரியிடம் ஆதாரம் இருக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

03.04.2024

**புதன்கிழமை**

**பங்குனி 21**

சுபநேரம் : 04.40 - 06.10

ராகுகாலம் : 12.10 - 01.40

**நாளொரு நல்வார்த்தை**

**நான் எடுக்கும் முடிவு**
**சரியா என்று எனக்குத் தெரியாது. ஆனால்**
**எடுத்த முடிவை சரியாக்குவேன்**

**– மாவீரன் அலெக்சாண்டர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறிமலைச் சம்பவம் மத ஒற்றுமையைக் குலைக்கும்

## சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம், உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப்.2**

**வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தன்று இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு நடந்துகொண்ட விதம் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என்று சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை என்பன தெரிவித்துள்ளன.**

சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை என்பன இணைந்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளன.

இலங்கையில் அனைத்துச் சமூகங்களின் மத்தியில் மத ஒற்றுமையை முன்னெடுக்க மன்றம் மற்றும் பேரவை எடுத்துவரும் முயற்சிகளை இப்படியான சம்பவங்கள் குலைத்துவிடுமோ என்ற அச்சம் உள்ளது.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் தேர்தல்கள் நடைபெறுவதற்கான சந்தர்ப்பம் நிலவும் நிலையில் வாக்குச் சேகரிப்புக்காகச் சில நாசகார சக்திகள் கலகத்தைத் தூண்டிவிடக்கூடும். எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் நடைபெறாது தவிர்க்க அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், சட்ட மற்றும் பாதுகாப்பு நிர்வாகங்கள் மிகவும் முன்னெச்சரிக்கையோடு செயற்படவேண்டுமென நாம் கேட்டுக்கொள்கிறோம் என்று அந்த அறிக்கையில் உள்ளது. (எ-இ)

# மெய்வன்மைப் போட்டி

கொழும்பு, ஏப். 2

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.யோகலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய தொழில்நுட்ப அலுவலர் பா.பாலமனோகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-17)

# மீன் சந்தையில் மாயமான பொருள்கள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

நாவற்குழி மீன் சந்தையில் கடந்தவாரம் திருடப்பட்ட பொருள்களின் ஒரு தொகுதி சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நாவற்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கடந்த சனிக்கிழமை இந்தப் பொருள்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சந்தையின் வாயிற்கதவு, அங்கிருந்த தகரம், இரும்புக் கம்பிகள் என்பன கடந்தவாரம் காணாமற்போயிருந்தன.

சாவகச்சேரி பிரதேசசபை இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தது. இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், நாவற்குழிச் சந்தியில் உள்ள வீடொன்றில் இருந்து ஒரு தொகுதிப் பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர். .(எ-159)

# சகஸ்ர காயத்ரி மந்திர நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.2

ஸ்ரீ சத்தியசாயி ஆராதனா மஹோற்சவத்தை முன்னிட்டு சகஸ்ர காயத்ரி மந்திர சாதனை நிகழ்வு, திருநெல்வேலியிலுள்ள யாழ்.ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறுகின்றது.

வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4.45 மணி முதல் மாலை 6.30 மணி வரையும், ஏனைய கிழமைகளில் மாலை 5.30 மணி முதல் மாலை 6.30 மணி வரையும் நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-66)

# உப அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம்

***கைதடி மக்கள் கோரிக்கை***

சாவகச்சேரி, ஏப்.2

சாவகச்சேரிபிரதேசசபையின் கைதடி உப அலுவலகத்துக்குநிரந்தரக்கட்டம்ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது உபஅலுவலகம் இயங்கும் வீட்டிலிருந்து வெளியேறுமாறு உரிமையாளரால் கோரப்பட்டுள்ளது. பிரதேசசபைக்கு சொந்தமான காணி ஒன்று கைதடிச் சந்தியில் உள்ளது. அங்கு உப அலுவலகத்தை அமைத்தால் பொதுமக்கள் இலகுவாகச் சேவைகளைப் பெறமுடியும். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.(எ-159)

# பல்கலை. மாணவர்களை பதிவு செய்ய கோரிக்கை

மாதகல், ஏப்.2

மாதகலிலிருந்து பல்கலைக்கழகம்சென்றுகல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் விவரங்களை, மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்க அலுவலகத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குமுன்னர்பதிவுசெய்து கொள்ள முடியும் என்று சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ப-66)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.2

மருத்துவரும், உரையாசிரியருமான நா. கணேசலிங்கநாதன் உரை எழுதிய 'பதார்த்த சூடாமணி' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு, வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வலி.மேற்குப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செ. கிருஷ்ணவதனா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மூத்த எழுத்தாளரும், சித்த மருத்துவருமான வெற்றிவேல் சக்திவேல், பிரதேச செயலர் கவிதா உதயகுமார், சித்த மருத்துவர்கள் ஜெ.கனகேஸ்வரி, து.சியாமா, நா.கணேசலிங்கநாதன், கு. கணநாதன், தி. சர்வானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவினர்களால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். காரிய அனுகூலம் உண்டாகும். வியாபாரம் சுமாராகவே இருக்கும்.

**இடபம்:** செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். வீண் செலவுகள் ஏற்படும். சிவவழிபாடு சிரமங்களைக் குறைக்கும்.வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். வியாபாரம் மந்தமாக காணப்படும். மகாலட்சுமியை வழிபட சிறப்பான பலன்கள் ஏற்படும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும் வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும். முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும்.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் சற்றுக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். . வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக இந்துக்களின் வாழ்வைப் பலப்படுத்துக

## அநுரவிடம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 2

**மலையக மக்களுடையதும், மலையக இந்துக்களு டையதும் வாழ்வை வளப்படுத்த உதவவேண்டும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரவைச் சந்தித்து மலையக இந்துக் குருமார்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

மலையக இந்துக் குருமார்களுக்கும் அநுரவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன்போதே, மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட விளக்கத்தை அநுரவுக்கு மலையக இந்துக் குருமார்கள் வழங்கியுள்ளனர். மலையக மக்களின் வீடு மற்றும் காணிப் பிரச்சினைகள், மலையகத்தில் இந்து சமயத்தையும் கலாசாரத்தையும் மேம்படுத்துதல் தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பில் சந்திப்பின்போது அநுரவிடம் தெரியப்படுத்தப்பட்டது. எங்களின் கோரிக்கை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார் என்று இந்துக் குருமார்களின் பிரதிநிதிகள் ஊடகங்களிடம் தெரிவித்தனர். (ம)


கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு

ஒரு மாத கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு.

077 873 0129

(CS54589) J-1



வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து K.K.S பிரதான வீதியில் சுன்னாகத்திற்கு இடையிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து 10 Km தூரத்தில் A9 பிரதான வீதியிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து 10 Km தூரத்தில் பருத்தித்துறை பிரதான வீதியின் அனைத்து பிரதான வீதியின் அருகாமையிலும் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 076 377 6540



பெயர்மாற்றம்

150 வீட்டுத்திட்டம் முக்கொம்பன் கிளிநொச்சியில் வதியும் **தவராசா கோபிகா** ஆகிய நான் எனது பெயரை **தவராசா மிதுஷிகா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தவராசா மிதுஷிகா** என்றே கையொப்பமிடுவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**தவராசா மிதுஷிகா**

(CS/54116) J-1


## விளையாட்டுகளின் மூலம் ஆரோக்கியம் பேணலாம்!



காதர் மஸ்தான் சுட்டிக்காட்டு

மன்னார், ஏப். 2

விளையாட்டுகளில் கவனம் செலுத்துவோர் எண்ணிக்கை இப்போது குறைந் துள்ளது. இந்த நிலைமையை மாற்ற வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது என்று இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

மன்னார் கரப்பந்தாட்ட பிரீமியர் லீக்கினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளையும் போட்டிகளில் சிறந்து விளங்கிய வீரர்களையும் கௌரவிக்கும் விழா துள்ளுக்குடியிருப்பில் அண்மையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். உடற்பயிற்சிகள் செய்வதால் பலருக்கு சிறுவயதிலேயே நோய்கள் ஏற்படுகின்றன. உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க விளையாட்டு அவசியம் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (எ-60)

### நடனப்போட்டி

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் நடத்தப்படவுள்ள அரசு நடனப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்கள், மாவட்ட நிலைப் போட்டியில் கலந்து கொள்வதற்கான இறுவட்டினை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசார அலகில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)


## மரண அறிவித்தல்



### விமலசேகரா ரஜனி இசபெல்லா

இல. 57, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விமலசேகரா ரஜனி இசபெல்லா நேற்றுமுன்தினம் (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை - எலிசபேத் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், விமலசேகரா அவர்களின் அன்பு மனைவியும், றெஜி அரவிந் (பிரான்ஸ்), மயூரின் லேணிகா (பிரான்ஸ்), நர்மலா ரேணுகா ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயா, பிரேம்காந், லொயிட் நிதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அனலியா, கல்வின், அக்ஷரா, ரிஷிகா, கதிர்ஷன், கிறீஸ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரஞ்சன், ரவி, ரமணி, ராஜன், ரஞ்சி, ரதி, ரூபன், பேசி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தனராஜா, தனலீலாவதி, புவிராஜா மற்றும் சுசிலாவதி, திலகவதி, காலஞ்சென்ற பிரேமாவதி மற்றும் கீதாவதி, கஜிதாவதி, வனிதாவதி, கருணாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 459 8083

(CS54604) N-1



## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மாடியில் : 31.03.1923 அம்மன் மடியில் 12.04.2004

### அமரர் பண்டாரி வேலாயுதம்

(மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, வேரற் கேணியடி)

**திதி: 02.04.2024**

தலை நிமிர்ந்து வாழ வைத்த தந்தையே!
இந்த நாளில் தலை சாய்த்து வணங்குகிறோம்
ஆண்டுகள் இருபது ஆகிவிட்டதே அப்பா!
ஆனாலும் நீங்காத நினைவுகளை இதயத்தில் சுமந்து
நீர் ததும்பும் விழிகளுடன் நினைவு கூருகின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(cs.54575) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைக்கேள்விக்கான கோரல் 2024 (கட்டம் II)
# வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.04.02 – 2024.04.15 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.04.16ம் திகதி 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2024.04.08 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை(ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/02/05/CF/2024/15 | அம்பலவாணர் வீதி கட்டம் II | 2.98 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 30,000.00 | 16.07.2024 |
| 02. | NP/14/41(15)/02/05/CF/2024/16 | சபாபதிப்பிள்ளை கிளை வீதி | 1.97 | 60 | C8 and C9 (வீதிகள்) | 49 | 04.06.2024 | 20,000.00 | 02.07.2024 |
| 03. | NP/14/41(15)/02/05/CF/2024/17 | **தொகுதி A**<br>குளத்தடி நாச்சிமார் வீதி 1ம் குறுக்கு வீதி<br>கன்னிமார் கோவில் விவசாய வீதி மிகுதி வேலை | 2.46 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 25,000.00 | 16.07.2024 |
| 04. | NP/14/41(15)/02/05/CF/2024/18 | **தொகுதி B**<br>கிரேசர் வீதி(சுன்னாகம் புத்தூர் கிளை வீதி)<br>சைவமகாஜனா கிளை வீதி | 2.15 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 22,000.00 | 16.07.2024 |
| 05. | NP/14/41(15)/02/05/CF/2024/19 | மல்வம் 1ம் குறுக்கு வீதி | 2.04 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 21,000.00 | 16.07.2024 |
| 06. | NP/14/41(15)/02/05/CF/2024/20 | **தொகுதி C**<br>பட்டியோலை பிரதான வீதி<br>கருணாகரப்பிள்ளையார் புகையிரத நிலைய இணைப்பு வீதி | 2.51 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 26,000.00 | 16.07.2024 |
| 07. | NP/14/41(15)/02/05/CF/2024/21 | **தொகுதி D**<br>1. மானிப்பாய் வீதியின் 4ம் குறுக்கு வீதி<br>2. மானிப்பாய் வீதியின் 2ம் குறுக்கு வீதி | 2.98 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 30,000.00 | 16.07.2024 |
| 08. | NP/14/41(15)/02/05/CF/2024/22 | **தொகுதி E**<br>1. பூவோடை கிறிஸ்தவ தேவாலய வீதி<br>2. பூவோடை இந்து மயான எல்லை மதில் அமைத்தல் - கட்டம் II | 2.06 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 21,000.00 | 16.07.2024 |
| 09. | NP/14/41(15)/02/05/CF/2024/23 | கதிரமலை வீதி - Part I - A | 2.29 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 23,000.00 | 16.07.2024 |
| 10. | NP/14/41(15)/02/05/CF/2024/24 | கதிரமலை வீதி - Part II | 4.21 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 43,000.00 | 16.07.2024 |
| 11. | NP/14/41(15)/02/05/CF/2024/25 | **தொகுதி F**<br>வடலி அம்மன் முன் 1ம் குறுக்கு வீதி புனரமைப்பு<br>வெளிப்புலம் 2ம் குறுக்கு வீதி புனரமைப்பு<br>கடவைப்புலம் வீதி திருத்தம் | 4.55 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 46,000.00 | 16.07.2024 |
| 12. | NP/14/41(15)/02/05/CF/2024/26 | கொத்தியாலடி குப்பை தரம் பிரித்தல் தள அபிவிருத்தி | 1.88 | 60 | C8 and C9 (கட்டடங்கள்) | 49 | 04.06.2024 | 19,000.00 | 02.07.2024 |
| 13. | NP/14/41(15)/02/05/CF/2024/27 | **தொகுதி G**<br>தம்பிமுத்து உபாத்தியார் வீதி 3ம் குறுக்கு வீதி<br>தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி குறுக்கு வீதி<br>விழிசிட்டி தேவாலய வலது பக்க வீதி புனரமைப்பு | 2.27 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 23,000.00 | 16.07.2024 |
| 14. | NP/14/41(15)/02/05/CF/2024/28 | இராஜேஸ்வரி அம்மன் குறுக்கு வீதி | 1.23 | 60 | C8 and C9 (வீதிகள்) | 49 | 04.06.2024 | 13,000.00 | 02.07.2024 |
| 15. | NP/14/41(15)/02/05/CF/2024/29 | **தொகுதி H**<br>மானிப்பாய் வீதி 8ம் குறுக்கு வீதி<br>மானிப்பாய் வீதி 1ம் குறுக்கு வீதி<br>தாவடி இந்து மயான உள்ளக வீதி அமைத்தல் | 2.31 | 87 | C7 and C8 (வீதிகள்) | 63 | 18.06.2024 | 24,000.00 | 16.07.2024 |
| 16. | NP/14/41(15)/02/05/CF/2024/30 | **தொகுதி I**<br>ஞானப்பிரகாசர் 1ம் குறுக்கு வீதி புனரமைப்பு<br>ஞானப்பிரகாசர் 2ம் குறுக்கு வீதி புனரமைப்பு | 1.63 | 60 | C8 and C9 (வீதிகள்) | 49 | 04.06.2024 | 17,000.00 | 02.07.2024 |
| 17. | NP/14/41(15)/02/05/CF/2024/31 | **தொகுதி J**<br>உசத்தியோடை இந்து மயானத்தில் எரி கொட்டகை அமைத்தல்<br>உசத்தியோடை இந்த மயானத்தில் உள்ளக வீதி அமைத்தல்<br>ஈவினை இந்து மயானத்தில் நீர்த் தாங்கி அமைத்தல் | 2.15 | 87 | C8 and C9 (வீதிகள், கட்டடங்கள்) | 63 | 18.06.2024 | 22,000.00 | 16.07.2024 |
| 18. | NP/14/41(15)/02/05/CF/2024/32 | வீதிப் பெயர் பலகை அமைத்து பொருத்துதல் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை | 3.37 | 60 | C7 and C8 (கட்டடங்கள்) | 63 | 04.06.2024 | 34,000.00 | 16.07.2024 |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii)

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

**02.04.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
DEVELOPMENT LOTTERIES




# அபிவிருத்தி லொத்தர் சபை

# வரலாற்றில் பெற்ற அதிக இலாபம்

## 2023 ஆம் வருடத்தில் பதிவாகியுள்ளது...!

## வாடிக்கையாளர்களுக்கு ரூ.13.4 பில்லியன் பெறுமதியான பரிசுகள்



## ரூ. 3.6 பில்லியன் ஜனாதிபதி நிதியத்துக்கும் ரூ. 5.1 பில்லியன் அரசாங்கத்துக்கும் பெற்றுக் கொடுத்து வரலாற்றில் தடம் பதித்த முழுமையான பங்களிப்பு

நாட்டின் பிள்ளைகளுக்கு அறிவையும் ஆரோக்கியத்தையும் பெற்றுக் கொடுத்து பல்லாயிரம் மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் உன்னதமான இலக்கை நோக்கமாகக் கொண்ட அபிவிருத்தி லொத்தர் சபை 2023 ஆம் ஆண்டு **வரலாற்றில் தடம் பதித்த அதிக இலாபத்தை ஜனாதிபதி நிதியத்துக்கு வழங்கியுள்ளது.**

இதற்கான நிதியை **மாண்புமிகு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களிடம்** கையளிக்கும் நிகழ்ச்சி அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல மற்றும் பொது முகாமையாளர் அனுர ஜயரத்ன அவர்களினதும் தலைமையில் முகாமைத்துவத்தின் பங்கேற்போடு அண்மையில் நடைபெற்றது.


**வெற்றிக்கு பங்காற்றிய அனைவருக்கும் நன்றி...!**

அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் . 11 . 03 . 1951



மறைவு . 31 . 03 . 2024

### நாகமுத்து இராசேந்திரம் (கட்டி)

வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தைப் பிறப்பிடமாகவும், Eastham, லண்டனை வசிப்பிடமாகவும், கொண்ட நாகமுத்து இராசேந்திரம்(கட்டி) அவர்கள் நேற்று முன்தினம் 31.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் தவமணிதேவியின் அன்புக் கணவரும், ஸ்வர்ணப்பிரதாவின் பாசமிகு தந்தையும், நிதர்சனனின்(ஜனா) மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய வதிவிடத்தில் (லண்டன்) இடம்பெறும். இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
**ஜனா (லண்டன்)**
**00447796346757/**
**0094776000970**

தகவல்:
**குடும்பத்தினர்.**
97, Caulfield Road,
Eastham
London E62EL
United Kingdom

(CS 28400) S-1

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி அருச்சுணன்

மூதூர் திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருச்சுணன் அவர்கள் நேற்று (01.04.2024) திங்கட்கிழமை காலமானானர்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடேசரத்தினம் மற்றும் துரையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வினோதினியின் அன்புக் கணவரும், அகல்யா, கௌசல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, கண்ணகை, புஸ்பமலர், முருகுப்பிள்ளை மற்றும் கிருபராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சண்முகராசா மற்றும் நிர்மலாதேவி, கம்சினி, நகுலேஸ்வரன், நந்தீஸ்வரன், குமுதினி, நாகேஸ்வரன், மிருணாளினி, காலஞ்சென்ற லங்கேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28397) S-1

## மரண அறிவித்தல்



**மண்ணுலகில்**
**26.05.1937**

**விண்ணுலகில்**
**22.03.2024**

### திரு சிமியோன் பிலிப் துரைராஜா

**(முன்னாள் கணக்காய்வாளர் சிலோன் தியேட்டர்ஸ் பழைய மாணவன் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி)**

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிமியோன் பிலிப் துரைராஜா 22.03.2024 அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சிமியோன் அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ராஜேஸ் புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலம் சென்ற ஜேக்கப் புஸ்பராஜா அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற றெஜினா ஜெயசீலியின் அன்பு மைத்துனரும், றெறன்ஸ் விமல்ராஜ் (கனடா), ஜேன் புளோரிடா (ஐக்கிய அமெரிக்கா), செறின் லயன்டா (கனடா), இவ்லின் மெரின்டா (கனடா), இவோன் மக்சில்டா (சுவிஸ்), காலம் சென்ற ஐஸ்மின் பிறிசில்டா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனஸ்ரா (கனடா), பெர்னான்டோ (செல்வம்-ஐக்கிய அமெரிக்கா), இதயரஞ்சன் (ரவி-கனடா), றமணன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வமணி (ராணி), காலஞ்சென்றவர்களான ஜெகசோதிமலர், சிறிஸ்கந்தராஜா, மற்றும் ஆனந்த வடிவேல், பேபிசறோஜா, நித்தியானந்ததேவி, உதயகுமார், காலஞ்சென்ற சக்திகுமார் மற்றும் விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கொன்சன் வெண்ணிலா குடும்பம் (பிரான்ஸ்) அன்பு காந்தி குடும்பம் ஆகியோரின் பிள்ளைகளின் பாசமிகு பெறாத தந்தையும், கிளமன்ஸ், ஜெனிபர், பிறன்டன், பிறையன், றாஜன், ஸ்ரெபானி றெஜின், றெனோஸ், லக்ஷிகா, பியோனா ஆகியோரின் பாசமிகு பேரனும், யூடித் பெலிசிற்றா, காலம் சென்ற எடின் நிமல்ராஜ் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

| | |
|---|---|
| பார்வைக்கு | : **05.04.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 மணிவரையும், 06.04.2024 அன்று காலை 8.00 மணி தொடக்கம் 9.30 வரை 8911** Woodbine Ave Markham ON L3R 5G1 **என்ற விலாசத்தில் அமைந்துள்ள** Chapel Ridge Funeral Home **இல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும்.** |
| திருப்பலி | : **06.04.2024 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு 14** Highgate Dr Markham**ல் அமைந்துள்ள** St Thomas Church **ல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.** |
| இறுதிதிச் சடங்கு | : **திருப்பலியினைத் தொடர்ந்து காலை 11.30 மணிக்கு 7770** Steeks Ave. Markham **இல் அமைந்துள்ள Christ the King சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.** |

**தொடர்புகளுக்கு:**
**றெறன்ஸ் (மகன்)-கனடா 6478788730, ஜேன் (மகள்) ஐ.அமெரிக்கா 9179728854, செறின் (மகன்) கனடா மொன்றியல் 5142953030, இவ்லின் (மகன்) கனடா மொன்றியல் 5145132551, எவோன் (மகள்) சுவிஸ் 41763839441**

(CS 28399) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும்...

வடக்கு மாகாணத்திலுள்ள சில பாடசாலைகளில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளின்போது பாடசாலைகளின் இல்ல அலங்காரத்தில் பயன்படுத்திய விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விநோத உடைப்போட்டியின் போதும் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

ஆகப் பிந்தியதாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல அலங்காரம் தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில் சிங்கள - பௌத்த கடும்போக்கு அமைப்புகளும், சிங்கள அரசியல் கட்சிகளும் இணைந்து நேற்றைய தினம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன. அந்தக் கடிதத்தில் மேற்படி பாடசாலைகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவை கோரியுள்ளன. இந்தக் கடிதம் ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபர், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு உள்ளிட்ட 10 க்கும் மேற்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-ஔ-5)

## வடக்குப்...

பாளர் மருத்துவக்கலாநிதி த.சத்தியமூர்த்தி செயற்பட்டு வரும் நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளது ஒப்புதலுடன் நேர்முகத்தேர்வு மூலமாக தெரிவுசெய்யப்பட்ட சுகாதார சேவைகள் மூத்த மருத்துவ நிர்வாகத்தர அதிகாரிகளுக்கான புதிய நியமனங்கள் நாடளாவிய ரீதியில் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளன. உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கடந்த 30ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்டுள்ள மேற்படி நியமனங்கள் மூலம் வடக்கு மாகாணத்தில் பல பதவிகளுக்கு சுகாதாரத்துறை மூத்த மருத்துவ நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தகைமைகளின் அடிப்படையில் மொத்தமாகத் தெரிவு செய்யப்பட்ட மூத்த மருத்துவ அதிகாரிகள் 80 பேரில் 10 பேர் மாத்திரமே தமிழ் பேசும் அதிகாரிகள். இவர்களிலும் புள்ளி அடிப்படையில் முன்னிலையில் உள்ள மூன்று தமிழ் அதிகாரிகள் தமது முன்னிலைத் தெரிவாக வடக்கு - கிழக்கைத் தெரிவு செய்திருக்கவில்லை. கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டி.வினோதனும், முல்லைத்தீவுப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக எம்.எஸ். உமாசங்கரும், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பி.கே. விக்கிரமசிங்கவும், வவுனியாப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக எஸ்.சுகுணனும் நியமிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைப் பணிப்பாளராக பி.எஸ்.என். விமலரட்ணவும், முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனையின் பணிப்பாளராக வீரக்கோனும், மன்னார் மாவட்டப் பொதுமருத்துவமனைப் பணிப்பாளராக எம்.எச்.எம்.அசாத்தும், வவுனியா மாவட்டப் பொதுமருத்துவமனைப் பணிப்பாளராக எஸ்.சுபாஸ்கரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக இரா.முரளீஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். இதனைத் தவிர, பொலநறுவை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக எஸ். ராஜ்குமாரும், கேகாலை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பெரியசாமி நிதர்சினியும், சிலாபம் மாவட்டப் பொது மருத்துவமனைப் பணிப்பாளராக என்.சி.லோகநாதனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(அ-ஔ-66-214)

## மேலதிக...

மேற்படி மனுதாரருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மேலதிக அறிக்கையைத் திருத்தி மீண்டும் தாக்கல் செய்துள்ளதாகப் பிரதிவாதி மன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவு விசாரணை நடத்திவரும் காணி மோசடி தொடர்பான வழக்கொன்றில் சட்டத்தரணி வீ.கௌதமன் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த ஜனவரி மாதம் முன்பிணை பெற்றிருந்தார். அந்த முன்பிணைக் கட்டளையில் முகத்தோற்றமளவில் மனுதாரர் மீது அவர் சான்றுப்படுத்தியதாகக் கூறப்படும் உறுதி நிறைவேற்றங்களில் ஏதாவது குற்றப் பொறுப்புடைமை காணப்படுவதாகத் திருப்பதியடையவில்லை என்று மன்று குறிப்பிட்டிருந்தது.

இந்தநிலையில், சட்டத்தரணி கு.குருபரன் ஊடாகச் சட்டத்தரணி வீ.கௌதமன் தற்போது தாக்கல் செய்த மனுவில்;

கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதியிட்டு மேலதிக அறிக்கையைப் பொலிஸார் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர். அந்த அறிக்கையில் மனுதாரர் தான் செய்த குற்றத்தை உணர்ந்து தன்னைப் பொலிஸார் எந்த நேரத்திலும் கைது செய்யலாம் என்ற அச்சத்தில் பிணை விண்ணப்பத்தைச் செய்தார் என்றும், குறித்த வழக்கில் மனுதாரரைக் கைது செய்ய வேண்டாம் என்று கட்டளையிடப்பட்டிருப்பதுடன், மனுதாரர் வழக்கில் சந்தேகநபராக முற்படுத்தவேண்டிய நபர் என்றும் கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மனுதாரர் மன்றில் சமுகமளிக்கும் வகையில் அறிவித்தல் வழங்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த வாசகங்களைக் கொண்ட விண்ணப்பமானது நீதிமன்றம் ஆக்கப்பட்ட கட்டளையை வேண்டுமென்றே தவறாக முன்னிலைப்படுத்திச் செய்யப்பட்ட விண்ணப்பம் என்பதுடன், நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் கீழ்மைப்படுத்துவதாகவும், நீதிமன்றத்தின் கௌரவத்தைக் கீழ்மைப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டே மனுதாரர் வீ.கௌதமன் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் முதலாம் பிரதிவாதியாக கொன்ஸ்டபிள் வசிகரனும், இரண்டாம் பிரதிவாதியாக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயனும் மன்றில் நேற்று முன்னிலையாகினர்.

மனுதாரரான சட்டத்தரணி வீ.கௌதமன் சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன், கு.குருபரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், வி.திருக்குமரன், யாழ். மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

முதலாம் எதிர்மனுதாரர் சார்பில் பி.சர்மினியும், இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் அன்ரன் புனிதநாயகமும் முன்னிலையாகினர்.

இரண்டாம் எதிர்மனுதாரரான பொலிஸ் பொறுப்பதிகாரி, மனுதாரரால் சுட்டிக்காட்டப்பட்ட விடயத்தை, யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் ஏற்கனவே தாக்கல் செய்த மேலதிக அறிக்கையை திருத்தம் செய்து தாக்கல் செய்துள்ளார். முதலாம் எதிர்மனுதாரர் தனது சட்டத்தரணியூடாக மனுதாரர் குறிப்பிட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட யாழ்ப்பாணம் நீதிவான் அ.அ.ஆனந்தாராஜா எதிர் மனுதாரர்களை சொந்தப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் வழக்கை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஔ-26)

## சடலத்தின்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்த வயோதிபப் பெண்ணின் பெருவிரலில் மை அடையாளம் காணப்பட்டமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் மகன் வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வந்துள்ளார். அவர் வெளிநாடு சென்ற சிறிது நாள்களில் தாயார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவர் இரண்டு நாள்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைகள் ஆரம்பமாகவிருந்த நிலையில், வெளிநாட்டிலுள்ள மகன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருக்குத் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு, தனது தாயாரின் பெருவிரல் அடையாளத்தைப் பெற்று சொத்துகளை மோசடியான முறையில் மாற்றம் செய்ய முயன்றுள்ளனர் என்ற தகவல் தனக்கு ஊரிலிருந்து கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சட்ட மருத்துவ நிபுணருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கத்துக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

உயிரிழந்த பெண்மணியைப் பராமரித்தவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, தாம் மருத்துவமனையில் சேர்க்கும்போது அவரது பெருவிரலில் எந்தவொரு மை அடையாளமும் இருக்கவில்லை என்றும் இப்போது அது எப்படி வந்தது என்பது தமக்குத் தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும் விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர். உயிரிழந்த பெண்ணின் மகன் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய பின்னரே உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சடலம் கையளிக்கப்படவுள்ளது. (ஔ-5-125)

## ஞானசார...

கான நேரம் அல்லவெனவும், சமாதானத்தை நோக்கிப்பயணிப்பதற்கான தருணம் இதுவென்றும் அவர் கூறினார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

2016 இல் கூரகல பகுதியில் சம்பவமொன்று இடம்பெற்றது. பௌத்தர்களின் புராதன பூமியாக விளங்கிய அப்பகுதியை முஸ்லிம் அடிப்படைவாதிகள் ஆக்கிரமித்தனர். முஸ்லிம் மக்கள் அல்ல, அடிப்படைவாதிகளே இதனைச் செய்தனர் என்பதைக் கூறிக்கொள்கின்றேன். இந்தச் சம்பவம் பௌத்த மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தாதா? நான் ஞானசார தேரரைப் பாதுகாக்க முற்படவில்லை. எனினும், யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். அடிப்படைவாதிகளின் செயலால் அப்பாவி முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படக்கூடாது. எனவே, ஞானசாரதேரர் வெளியிட்டிருந்த கருத்து மக்கள் மனதைப் புண்படுத்தி இருந்தால் அதுவும் தவறு. அதனைக் கண்டிக்கின்றோம்.

இன்று அடிப்படைவாதம் முடிந்துவிட்டது. ஐ.எஸ். அடிப்படைவாதம் இந்நாட்டில் தலைதூக்கும் என்பதை ஞானசாரதேரரே முதலில் சுட்டிக்காட்டி இருந்தார். இது சமாதானத்தை நோக்கி பயணிக்கவேண்டிய காலம். பகைமைக்குப் பதிலாக மன்னிப்பு பற்றி கவனம் செலுத்தவேண்டிய காலம். எனவே, ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும். ஞானசாரதேரருக்கு எதிராக வழக்குத் தொடுத்தவர்கள் அதனை மீளப் பெறவேண்டும் - என்றார். (அ-ஔ-44)

## சாவுத்...

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் சுகவீனத்தால் உயிரிழந்துள்ளார்.

2015ஆம் ஆண்டு புங்குடுதீவைச் சேர்ந்த 18 வயதுடைய சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் கண்டி தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புங்குடுதீவைச் சேர்ந்த பூபாலசிங்கம் தவகுமார் செந்தில் (வயது-37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டி தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில நிமிடங்களிலேயே அவர் உயிரிழந்தார் எனவும், அவர் நிமோனியாவால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஔ-இ)

## கடல்...

குருநகர் கடல் திடீரெனப் பெருக்கெடுத்ததால் அலையில் சிக்கி காணாமற்போன இளைஞர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, பெரியகல்லாறைச் சேர்ந்த ரவீந்திரன் யதுசன் (வயது - 19) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குருநகரிலுள்ள பெரியதாய் வீட்டில் இளைஞன் தங்கியுள்ளார். நேற்றுமுன்தினம் மு.ப.11.30 மணிக்கு, மட்டி பொறுக்குவதற்காக பெரிய தந்தையுடன் கடலுக்குச் சென்றுள்ளார், கடல் வற்றிய நேரம் நீண்ட தூரம் சென்றுள்ளார். திடீரெனக் கடல் பெருக்கெடுத்துள்ளது. இதனால் அலையில் இளைஞர் அடித்துச் செல்லப்பட்டார். இளைஞனை நீண்டநேரம் தேடியும் அவர் கிடைக்கவில்லை. நேற்றுக் காலை இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ஔ-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மைதானத்தில் மும்பைக்கு மரணஅடி



தனது சொந்த மைதானத்தில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி நேற்று படுதோல்வியைச் சந்தித்தது. இதன்மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் விளையாடிய 3 ஆட்டங்களிலும் அந்த அணி தோல்வியைச் சந்தித்துள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் பந்து வீசத் தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய மும்பைக்கு முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே அதிர்ச்சியளித்தார் போல்ட். மும்பையின் முன்னாள் தலைவர் ரோஹித் ஓட்டமெதுவும் பெறாமல் முதலாவது பந்திலேயே வெளியேறி அந்த அணியின் சரிவைத் தொடக்கி வைத்தார். 20 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை அந்த அணி இழந்தது. அணித் தலைவர் ஹார்திக் பாண்டியாவும், திலக் வர்மாவும் இணைந்து போராடினர். இருப்பினும் பாண்டியா 21 பந்துகளில் 34 ஓட்டங்களுடனும், திலக் வர்மா 29 பந்துகளில் 32 ஓட்டங்களுடனும் வெளியேற 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் போல்ட் 22 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சஹால் 11 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கை விரட்டிய ராஜஸ்தானுக்கு ஆகாஸ் மத்வால் நெருக்கடி கொடுத்தார். ரியான் பராக் 39 பந்துகளில் 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க 15.3 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்தே வெற்றியிலக்கை ராஜஸ்தானால் அடைய முடிந்தது. பந்து வீச்சில் மத்வால் 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக ராஜஸ்தானின் போல்ட் தெரிவானார். (ஒ-5)


## கணக்காளர் தேவை

விற்பனை விநியோக நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் தேவை (Accounts) முன் அனுபவம் விரும்பத்தக்கது. யாழ் நகரை அண்டியிருத்தல் வேண்டும். வயது எல்லை 25-50 வரை.

ஆண், பெண் இருபாலரும் இணைந்துகொள்ள முடியும்.

தொடர்பு: 077 583 3045

## வீடு வளவு விற்பனைக்குண்டு

சுன்னாகம் கிழக்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள 4 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

076 934 7728

Whatsapp: 416 303 5706

## காணி விற்பனைக்கு

இராச வீதியில் பிரதான வீதியிலிருந்து சிறுப்பிட்டி நீர்வேலி 100 M தூரத்திலுள்ள 31 பரப்பு 14 குழி கலட்டிக் காணி விற்பனைக்கு விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

whatsup No: 0041 79 523 0698

0094 78 697 5384


## 1990...

தொழில்நுட்பக்கோளாறு காரணமாக இந்தச் சேவை முடங்கியுள்ளது. இந்த அம்புலன்ஸ் சேவையைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றே பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை நேற்று இரவு வரையில் நீடித்தது. (ஒ-23)



## வீடு வாடகைக்கு உண்டு

இருபாலைச் சந்திக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

076 185 1503

(CS28394) J-1

## 31ஆம் நினைவு நாள் அழைப்பும் நன்றி நவிலலும்



தாயின் மடியில் 17.08.1947

இறைவன் அடியில் 03.03.2024

யாழ்.கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சவுதி அரேபியா, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், கொக்குவில், தாவடி, வேம்படி முருகமூர்த்தி கோவிலடியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட

### இராசையா பாலச்சந்திரன் (சந்திரன்)

கடந்த 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வருகை தந்தும், தொலைபேசியூடாகவும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் இதய அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு உதவிகளை உணர்வுடன் ஆற்றியவர்களுக்கும், இறுதிக் கிரியையில் பங்குபற்றிய பெருமக்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்திலும், தகனக்கிரியையிலும் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் உங்களது மாசற்ற அன்பையும், சேவையினையும், பங்களிப்பினையும், நீள நினைந்து நன்றி நவில்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன நிகழ்வும் இன்று (02.04.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சவனப்பதி முருகன்கோவில்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.
076 116 5763

(CS 28393) S-1

## 100ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



02.04.1924 02.04.2024

### அமரர் செல்லையா சேனாதிராஜா

அன்போடும் பண்போடும் அறநெறி வாழ்க்கை வாழ்ந்து
உறவுகளை ஆசீர்வதித்து நல்வாழ்வு வாழ வைத்த
இன்னுயிர்த் தந்தையை நூறாவது பிறந்தநாளில் நினைவு கூர்ந்து
ஆத்மா சாந்திபெற நல்லைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.
இன்று நாம் இன்பமாய் வாழ எமக்கு நல்வழிகாட்டிய ஐயாவே!
உங்கள் அன்பு முகம் மறக்க முடியவில்லையே!
நாங்கள் நலமே வாழ உங்களையே அர்ப்பணித்தீர்கள்
ஆத்மா சாந்தி பெறட்டும். நந்தாவில் கற்புலந்து
மனோன்மணி அம்மையை வணங்கி வாழ்த்துகின்றோம்.

அம்மன் கோவில் வீதி,
கோண்டாவில்.

100ஆவது பிறந்தநாளில் நினைவுகூரும் குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.